# வாதிகள்  தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

O.S. No. 730/2023 Date : 01.09.2025

பெயர் : கிருஷ்ணன் பி.வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். 1990 ஆம் ஆண்டு வாதியின் தகப்பனார் நாராயணன் என்பவர் பெயரில் பட்டா தாக்கல் ஆகி உள்ள நிலையில் அதன் பின்னிட்டு நாங்கள் பெற்ற பட்டா செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதியின் தந்தை பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யாத நிலையில் அச்சொத்திற்கு நான் வீட்டு வரி செலுத்தியது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் பட்டா ஆகிய ஆவணங்கள் உள்ள நிலையில் அச்சொத்தை 1 மற்றும் 2வது பிரதிவாதிகள் பெயரில் நான் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது செல்லாது என்றால் சரியல்ல.எனது தகப்பனார் தாவா சொத்தில் அவரது உரிமையை விட்டுக் கொடுத்து விட்டதால் அதன் பின்னிட்டு அச்சத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல எனது தகப்பனார் அவரது உரிமையை விட்டுக் கொடுக்கவில்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியை ஒன்றாம் வாதி கண்ணன் அடைக்கலராஜ் என்பவருக்கு விற்பனை செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும்.தாவா சொத்தின் ஒரு பகுதியை ஒன்றாம் தேதி அவரது மனைவி குமுதா என்பவர் பெயருக்கு மார்ச் மாதம் 2011 ஆம் ஆண்டு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்களை ரத்து செய்யாத நிலையில் ஒன்று இரண்டு பிரதிவாதிகள் பெயரில் டிசம்பர் 2011 ஆம் ஆண்டு நான் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த ஆவணம் செல்ல தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாவாசொத்தில் தவறாக உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் பாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.